# சின்ன வெங்காயத்தின் விலை உயரும்

வேளாண் மற்றும் விவசாய நல அமைச்சகத்தின் மூன்றாவது முன் கூட்டிய மதிப்பீட்டின் படி, 2019 -20 ஆண்டில், தமிழ்நாட்டில் சின்ன வெங்காயம் 0.28 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 3.55 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு, கர்நாடக, ஆந்திர பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய பகுதிகளில் அதிகளவு சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில், மொத்த வெங்காய பரப்பளவில் 90 சதவீதத்திற்கும் மேல் சின்ன வெங்காயமும் மீதம் பெல்லாரி வெங்காயமும் பயிரிடப்படுகின்றன. திண்டுக்கல், திருப்பூர், பெரம்பலூர், திருச்சி மற்றும் நாமக்கல், ஆகிய மாவட்டங்களில் சின்ன வெங்காயத்தை அதிகளவு பயிரிடுகின்றனர்.

வர்த்தக மூலங்களின் படி, கர்நாடக மற்றும் ஆந்திர பிரதேசத்தில் பருவமழை காரணமாக பயிர் சேதமடைந்ததால் வெங்காயத்தின் வரத்து தமிழ்நாட்டு சந்தையில் குறைந்துள்ளது. மேலும், ஜுலை மற்றும் அக்டோபர் மாதங்களில் தமிழ்நாட்டில் விதைக்கப்பட்ட பயிர்கள் பருவ மழையினால் பாதிக்கப்பட்டதால் விளைந்த மற்றும் சேமித்து வைக்கப்பட்ட வெங்காயமும் பெருமளவு அழிந்துவிட்டன. இதனால், சின்ன வெங்காயத்தின் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. கர்நாடகாவிலிருந்து புதிய வரத்து வந்தால் மட்டுமே விலை குறைய ஆரம்பிக்கலாம்.

சின்ன வெங்காயத்தின் அளவின் அடிப்படையில் மூன்று தரமாக பிரிக்கப்படுகிறது. முதல் தரம் 27 மி.மீ, இரண்டாவது தரம் 23 மி.மீ மற்றும் 18 மி.மீ மூன்றாவது தரமாகும், கடைசி தரம் விதைக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. முதல் தரமான சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை வரும் வாரங்களில் கிலோவிற்கு ரூ. 75 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழலில் வெங்காயத்தின் விலை ஜனவரி 2022 வரை உயரும், அதன் பிறகு நிலையானதாக இருக்கும். எனவே, விவசாயிகள் தகுந்த, விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.


**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641 003

தொலைபேசி- 0422-2431405

**<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்

காய்கறிப் பயிர்கள் துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் - 641 003.

தொலைபேசி எண் :- 0422-6611374

## Price will Soar for Small Onion

According to the Third Advance Estimates (2019-20) of Ministry of Agriculture and Farmers Welfare, the area and production of small onion in Tamil Nadu is estimated to be 0.28 lakh ha and 3.55 lakh tonnes respectively. Small onion is mainly grown in the states of Tamil Nadu, Karnataka, Andhra Pradesh and Odissa.

In Tamil Nadu, small onion is cultivated more than 90 per cent of the total onion area and remaining area is under bellary onion. Dindigul, Tiruppur, Perambalur, Trichy and Namakkal are the major small onion producing districts in Tamil Nadu.

According to trade source, monsoon and associated crop failure in Karnataka and Andhra Pradesh has reduced the arrivals of onion to Tamil Nadu market. Both July and October sown crops in Tamil Nadu are worst affected by the Monsoon raises and the standing crop as well as the stored onion are also destroyed to huge extent. Hence, the price of small onion is likely to increase in coming days and the price may fall after the fresh arrivals from Karnataka.

Based on the size, shallot is graded into three groups. First quality is of 27 mm size, the second quality is of 23 mm and the third grade is of 18 mm size which is mostly preferred for seed purpose. Farm gate price for first quality shallot will revolve around Rs. 75 per Kg for a couple of weeks. In this context, the price of shallot will soar up to January’2022 and there upon the price will be stable. Hence, the farmers are advised to take appropriate selling decision.

***For Marketing details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

***For Technical Details please contact****:*

*Professor and Head*
*Department of Vegetable crops*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore-641003*
*Phone: 0422-6611374*